**ஜா-எல நகர சபை - 2022**
-----------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

ஜா-எல நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான கூற்று, வருமானம் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, ஜா-எல நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டு இருந்து கணக்கீட்டு கொள்கைகளில் ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் குறைந்து | 2023 இறுதிக் கணக்குகள் தயாரிக்க முன்னர் இந்த விடயத்தை பூர்த்தி செய்து கணக்கீட்டு நியமம் 6.10 இன் | நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு கணிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | செல்லும் பெறுமானத்தேய்வு முறையின் படி கணிக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 172,808,977 தொகைக்கான ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத் தேய்வு கழித்திருக்கவில்லை. | பிரகாரம் பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் 18.7 பந்தியின் படி அனைத்து சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான 235 காணித் துண்டுகள், இயந்திர உபகரணங்கள், தள்ளு வண்டிகள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 235 காணித் துண்டுகள் சபைக்கு சொந்தமான பாதைகளை விரிவாக்குவதற்காக உரித்தாக்கப்பட்ட காணிகள் மிகவும் சிறிய அளவாக காணப்பட்டதுடன் தற்போது பௌதீக ரீதியாக இனங்காணுவதற்கு முடியாத நிலைமையில் காணப்பட்டது. தளபாடங்கள் உபகரணங்கள் மற்றும் பொருத்து விடயங்கள் 2023 இறுதிக் கணக்குகள் தயாரிக்க முன்னர் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அனைத்து சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய மூலதனச் செலவுகள் மற்றும் அதற்குரிய ரூபா 29,467,017 தொகைக்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் சரியாக எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்குகள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது களஞ்சிய கடன்கொடுத்தோருக்கு செலுத்தியிருந்த ரூபா 478,253 தொகை களஞ்சியக் கடன்கொடுத்தோர் பேரேட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இந்தக் குறைபாட்டினை நாட்குறிப்பு மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது பொதுக் களஞ்சியத்திலிருந்து ரூபா 2,279,640 இற்கான பண்டங்கள் வழங்குதல் பொதுக் களஞ்சிய கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்கு பதிலாக களஞ்சிய கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2023 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஈ) | 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான செலுத்த வேண்டிய ரூபா 827,314 இற்கான கணக்காய்வுக் கட்டணம் மீளாய்வாண்டிற்கான செலவுகள் என காட்டப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு தொடர்பான செலுத்த வேண்டிய | 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்குரிய கணக்காய்வுக் கட்டணம் மீளாய்வாண்டின் செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கம் ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (உ) | மீளாய்வாண்டின் போது ரூபா 5,000,000 மதிப்பீட்டிற்கான மின் உயர்த்தி கொள்வனவு செய்வதற்காக பத்திரிகை விளம்பரம் வெளியிடல் மாத்திரம் வெளியிடப்பட்டிருந்த போதும், அதன் பெறுமதி ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கட்டிட நடைபெறு வேலை என மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | பொதுக் கூட்டத்தில் 05 – 01 இன் கீழ் அங்கீகாரத்தின் மீது மதிப்பாய்வுக் குழுவொன்றுக்கு குறிப்பிட்ட கோவை தற்போது அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி, மின் உயர்த்தியொன்று கொள்வனவு செய்வதற்காக இந்தப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து சம்பளம் தயாரிக்கும் மென்பொருள் ஒன்று கொள்வனவு செய்வதற்காக ரூபா 865,000 தொகை மற்றும் முன்னைய ஆண்டின் மனித வள முகாமைத்துவ மென்பொருள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட தொகையில் ரூபா 927,200 தொகை நாட்குறிப்பு 36 மூலம் மூலதனப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அகல்விரிவான வருமானக் கூற்றில் பௌதீக திட்டங்களின் கீழ் செலவு ஒன்று எனவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - |
| (எ) | மனித வள முகாமைத்துவ மென்பொருளுக்காக செலவிடப்பட்டிருந்த மொத்தப் பெறுமதி ரூபா 2,995,000 தொகை மூலதனப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 927,200 தொகை மாத்திரம் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | ஜா-எல நகர சபை விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்வதற்கான மொத்தத் தொகை ரூபா 4,731,766 தொகை மூலதன மானியம் மற்றும் ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு பதிலாக மீளாய்வாண்டு இறுதியளவில் பெற வேண்டியிருந்த தொகையாகிய ரூபா 2,195,016 தொகை மாத்திரம் பெற வேண்டிய மூலதன மானியம் மற்றும் மூலதன மானியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 2,536,750 தொகை | அடுத்த நிதிக் கூற்று தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடு ஏற்படாதவாறு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்திற்கு மற்றும் செலவிற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | 1 வியாபார நிலைய வாடகை ரூபா 13,220,646 தொகைக்கான உள்ளவாறான சிட்டையிடல் ரூபா 2,520,600 தொகையென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 10,700,046 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் இந்த குறைபாட்டை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஒ) | சபையினால் பயன்படுத்தப்படும் புதிய வர்த்தக தொடர் கட்டிடத்தின் 5 கடையறைகளுக்காக 2018 ஆண்டு முதல் பிழையாக கடை வாடகை சிட்டையிடப்பட்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 561,117 தொகை மற்றும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கடை வாடகை ரூபா 2,627,234 தொகை மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2023 கணக்குகள் தயாரிக்கும் போது இந்த பெறுமதி ஏடுகளிலிருந்து அகற்றி கணக்கினை தத்துரூபமாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஓ) | 2018 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 33,296,736 தொகை பெற வேண்டிய தொகையொன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | முத்திரைக் கட்டண வருமானம் பெற்றுக்கொள்ளும் போது ஏற்பட்டுள்ள பொதுவான தாமத்தை கவனத்தில் எடுத்து பெறுவனவுளை அடிப்படையாகக் கொண்டு கணக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன என. | - மேற்படி - |
| (ஔ) | கட்டிட நிர்மாண வேலைகள் மற்றும் பாதைகள், மதகுகள் மற்றும் பாலங்களுக்கான மீளாய்வாண்டின் மூலதனச் செலவு ரூபா 4,402,318 தொகை நடைமுறை அல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | அடுத்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த குறைபாடுகள் இன்றி கணக்குத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் கூட்டுத்தொகை மற்றும் 15 கணக்கு பேரேட்டு மீதிகளிடையே ரூபா 46,156,897 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | 2023 கணக்குத் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய மூலதன மானியம் ரூபா 13,061,119 தொகைக்கான மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | உரிய அட்டவணைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் VII ஆவது அத்தியாயத்தின் பந்தி 38(2) | நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்பட வேண்டிய எழுத்துமூல மீளாய்வின் எழுத்துமூல பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் தொடர்பாக எழுத்துமூல மீளாய்வொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் | | | |
| | I. நி.பி. 110(1) | நகர சபையினால் நட்டங்கள் சேதங்கள் பதிவேடொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | நட்டங்கள் சேதங்கள் பதிவேடென்று தயாரிக்கப்பட்டு நாளதுவரை ஆக்கி பேணிச் செல்லும் படி சபையின் வேலைப் பிரிவுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| | II.நி.பி.571 | ரூபா 5,200,068 தொகைக்கான 2 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்களை ஆதனவழிப்புச் | 2021, 2020 ஆண்டுகளின் போது 02 வருடங்களை மிகைத்திருந்த | குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்திருக்கவில்லை. | வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், 2023 ஆண்டில் காலவரியான வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி கணக்கு முகாமைத்துவ உதவியாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | |
| iv நி.பி. 880 | சபையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மூவரினால் பிணை வைத்திருக்கவில்லை. | தற்போது கடமை புரியும் பிணை வைக்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தரிடமும் பிணை வைப்பு பெற்றுக் கொள்வதற்கும் அதற்கு உரிய ஆவனங்கள் நாளதுவரையாக பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 25,390,607 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 44,943,673 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 செப்தம்பர் 01 திகதி சிட்டையிடப்படாத நிகழ்வு நிலை கொடுப்பனவின் கீழ் ரூபா 56,372 இற்கான மிகை வைப்புத் தொகை மீளாய்வாண்டின் போது இனங் கண்டு கணக்குகளின் பதிவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட நிறுவனங்களுடன் செயற்பட்டு நிகழ்வு நிலை கொடுப்பனவை விரைவாக தீர்த்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 46,330 | 46,185 | 38,687 | 54,320 | 45,330 | 39,932 | 34,650 | 34,913 |
| (ii) | வாடகை | 22,597 | 17,666 | 21,143 | 13,655 | 22,577 | 19,566 | 6,552 | 18,648 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,200 | 443 | 482 | (39) | 1,200 | 528 | 528 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 93,409 | 18,773 | 18,868 | (96) | 92,735 | 35,375 | 35,375 | - |
| | மொத்தம் | 163,536 | 83,067 | 79,180 | 67,840 | 161,842 | 95,401 | 77,105 | 53,561 |

**2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்**

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் மொத்த மதிப்பீட்டு வருமானத்தில் 59 சதவீதம் சிட்டையிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் மொத்த மதிப்பீட்டு வருமானத்தில் 51 சதவீதம் மாத்திரம் சிட்டையிடப்பட்டிருந்தது. | பதிலளித்திருக்கவில்லை. | தத்துரூபமாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை செய்முறை கடை பிடிக்கப்படாமல் ரூபா 865,000 இற்கான சம்பளம் மற்றும் அறிக்கைகள் முகாமைத்துவ மென்பொருள் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், செயற்படு நிலைமைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட மென்பொருள் சபை தீர்மானத்தின் படி அந்த கம்பனியில் இருந்து கொள்வனவு செய்வதற்கா நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | கொள்வனவுகளின் போது பெறுகை செய்முறை கடை பிடிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019, 2020 மற்றும் 2022 ஆண்டுகளின் போது கூட்டுத்தொகை ரூபா 8,435,000 தொகை செலுத்தி 11 கணினி மென்பொருள் முறைமைகள் கொள்வனவு செய்திருந்த போதிலும், 2019 ஆண்டில் அணுகியிருந்த உடன்படிக்கையின் இலக்கம் 6.1 – 6.10 வரையான நிபந்தனைகளில் கவனம் செலுத்தி தரவுகளின் பாதுகாப்புத் தன்மை தொடர்பாக கவனம் செலுத்தி மோசடிகள் மற்றும் ஊழல்களை தவிர்ந்துகொள்வதற்காக அந்த நிபந்தனைகளை கடைப்பிடித்திருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | தரவுகளின் பாதுகாப்புத் தன்மை தொடர்பாக கவனம செலுத்தி மோசடிகள் மற்றும் ஊழல்களை தவிர்ப்பதற்காக அந்த நிபந்தனைகளை கடை பிடிக்க வேண்டும். |
| (இ) | இருப்பு மற்றும் களஞ்சிய முகாமைத்துவ மென்பொருள் முறைமைக்காக 2020 ஜூன் 18 திகதி அளவில் ரூபா 655,000 தொகை செலுத்தியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2022 செப்தம்பர் 30 திகதி அளவிலும் முறைமை செயற்படு நிலைமையில் காணப்படாமையால் அச் செலவு விளைவற்ற செலவொன்றாகியிருந்தது. | - மேற்படி - | முறைமையை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | அனைத்து கணக்குகள் மற்றும் அறிக்கைகள் முகாமைத்துவ மென்பொருளுக்காக 2020 ஜூன் 18 திகதி அளவில் ரூபா 695,000 தொகை செலுத்தியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2022 செப்தெம்பர் 30 திகதி அளவிலும் மென்பொருள் முறைமையில் அடங்கிய சமப்படுத்தப்பட்ட மாதாந்த கொடுப்பனவு அறிக்கை (LG 11) பெற்றுக்கொள்ளல் நிதிக் கூற்றுக்கள் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | தயாரித்தல் மற்றும் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரித்தல் ஆகிய விடயங்களை நிறைவேற்றுவதற்கு முடியாமல் உள்ளது. | | |
| (உ) | ஒரு சவம் எரிப்பதற்காக தேவைப்படும் சராசரி எரிவாயு அளவு தொடர்பாக எரிவு அறிக்கையொன்று சபை பெற்றுக்கொண்டிருக்காததுடன், தகன கூடத்திற்கு கிடைக்கும் எரிவாயு எண்ணிக்கை, செலவிடப்பட்ட எண்ணிக்கை மற்றும் மீதி எண்ணிக்கை என்பவற்றை காட்டி தகனசாலை பொறுப்பாளரினால் முறையான பதிவேடொன்று பேணியிருக்கவில்லை. | கபுவத்த தகனகூடத்தின் பொறுப்பாளருக்கு அனுப்பப்பட்ட சவங்கள் தொடர்பான பதிவேடொன்று தகனகூட பொறுப்பாளரினால் பேணிச் செல்வதுடன், களஞ்சியத்தினால் வழங்கப்படும் எரிவாயு சிலின்டர் எண்ணிக்கையின் மூலம் தகனம் செய்யப்பட்ட சவங்கள் தொடர்பான பதிவேடு வழங்கப்பட்ட எரிவாயு எண்ணிக்கையுடன் இணக்கம் செய்து செலவிடப்பட்ட எரிவாயு எண்ணிக்கை தொடர்பாக அடிக்கடி மதிப்பாய்வு செய்யப்படுகின்றன என. | முறைப் பிரகாரம் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |
| (ஊ) | 2022 செப்தம்பர் 29 திகதி தகனகூட தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது தகனகூடத்தின் சூளையுள் காணப்படும் பர்னர் இடையே கற்கள் அகன்றிருந்தமையால் பர்னரில் இருந்து வெளியேறும் புகை வெளிச் சூழலுக்கு கசிவதென அவதானிக்கப்பட்டது. | பதில் அளிக்கப்படவில்லை. | முறைப் பிரகாரம் திருத்த வேலை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் மேற்கொள்ளப்பட்ட வாகனப் பரிசோதனையின் போது இனங் காணப்பட்ட சபைக்கு சொந்தமான 3 தள்ளுவண்டிகளின் பற்றாக்குறை தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | வாகனக் கணிப்பீட்டு அறிக்கை மற்றும் வாகன அட்டவணை உரிய முறையில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணிப்பீட்டு அறிக்கையின் படி சபைக்கு சொந்தமான 4 காணிகளின் அளவுகள் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமல் இருந்தது. | - மேற்படி - | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை வேறாக இனங்காணக் கூடியவாறு பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியொன்றும் இனங் காண வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆரம்ப மட்டத்தில் 11 பதவியணி வெற்றிடங்களும், இரண்டாம் மட்டத்தில் 5 பதவிகளில் 11 வெற்றிடங்களும், சிரேஷ்ட மட்டத்தில் பதவியொன்றிற்கான வெற்றிடமும் காணப்பட்டது. | ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்ட வெற்றிடங்கள் தொடர்பாக முன்னேற்ற அறிக்கை மூலம் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு போலவே பிரதான செயலாளருக்கும் அறிவுருத்தப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |